மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியில் பைக்கா திட்டத்தின்மூலம் மேல்பாலை புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியிலும், பாலவிளை அரசு தொடக்கப் பள்ளியிலும் சிறப்பான முறையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, அங்கே வைப்பு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கொல்லஞ்சி, நட்டாலம், விளாத்துறை, தேவிகோடு, மலையடி, மாங்கோடு, மஞ்சாலுமூடு, மருதங்கோடு, முழுக்கோடு, புலியூர்சாலை, வள்ளியூர், வெள்ளங்கோடு மற்றும் விளவங்கோடு போன்ற 11-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2013-2014 ஆம் நிதியாண்டிலும், 2014-2015 ஆம் நிதியாண்டிலும் ஒவ்வோர் ஊராட்சிக்கும் தலா ரூ.20,000/- கொடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் கிராம விளையாட்டு மைதானங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மற்ற நகரங்களுக்கும் இதுபோன்ற விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியதுபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டால், துறை ரீதியாக ஆய்வு செய்து, விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து, நடவடிக்கை எடுக்கப்படும், கட்டமைப்புகள் உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

206—

மாணவர் விடுதி

***53571—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 2]

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது பதிலைச் சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 10-50

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி, ஊத்தங்கரையில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளின் சிறந்த செயல்பாட்டினால், இதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2,458 மாணவர்களும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2,242 மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் சுமார் 600-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் ஆதி திராவிட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், தொலை தூரத்திலிருந்து மாணாக்கர்கள் வந்து கல்வி கற்பதாலும், இப்பகுதியில் 50 மாணவர்களைக் கொண்ட ஓர் ஆதி திராவிடர் நல ஆண்கள் விடுதியும், 50 மாணவிகளைக் கொண்ட ஒரு பெண்கள் விடுதியும் இருக்கின்றன. இவை முறையே 1962 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கையைக் கூடுதலாக்க வேண்டும் எனத் தெரிவித்த ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, இரண்டு விடுதிகளிலும் தற்போது கூடுதலாக 75 மாணாக்கர்களின் சேர்க்கைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஊத்தங்கரையிலுள்ள ஆதி திராவிடர் நல ஆண்கள் விடுதியில் கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்தினால் போதுமானது என்பதால், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனை பெற்று, கூடுதல் கட்டடங்கள்

கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயில்கின்றனர். இந்தப் பள்ளி சிறந்த பள்ளி என்பதால், அதிகமான மாணவர்கள், அதாவது, 2,400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். கூடுதல் கட்டடம் கட்டப்படும் என அறிவித்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த ஊத்தங்கரை தொகுதியின் 33 ஏரி கால்வாய் இணைப்பை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள்

***53860—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—